# இலங்கை உள்நாட்டு இறைவரி

## பொருளாதார சேவைக் கட்டண (E.S.C) விபரத்திரட்டை நிரப்புவதற்கான வழிகாட்டி
## மதிப்பீட்டாண்டு 2019/2020

**பொது அறிவுறுத்தல்கள்**
இந்த வழிகாட்டியானது 2020.03.31 முடிவுறும் மதிப்பீட்டாண்டிற்கு பொருத்தப்பாடுடையது. பொருளாதார சேவை கட்டண விபரத்திரட்டை நிரப்புவதற்கு உதவும் நோக்குடன் இவ் வழிகாட்டி உங்களுக்கு வழங்கப்படுகின்றது. எதிர்கால சான்றாதாரங்களுக்காக பூரணப்படுத்தப்பட்ட விபரத்திரட்டின் பிரதி ஒன்றினை வைத்திருக்க வேண்டப்படுகின்றீர்கள்.

**பொருளாதார சேவை கட்டண விபரத்திரட்டை நிரப்புவதற்க்கான வழிகாட்டல்**
**1. புரள்வு**
உரிய காலாண்டிற்கு பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள புரள்வு, கீழ்கண்டவாறு உரிய கூடுகளில் நிரப்பப்பட வேண்டுமென்பதுடன் பொருளாதார சேவை கட்டணப் பொறுப்புக்கள் குறிப்பிட்ட 0.5% விகிதத்தில் கணக்கிடப்படுதலும் வேண்டும்.

1. பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விற்பனையிலிருந்தான உரிய புரள்வினை **“(A)”கூட்டில் பதியவும்**
2. இல. 2036/23 வர்த்தமானி அறிவித்தலின் (வழிகாட்டியின் விடயம் (2) (ii) இனைப் பார்க்கவும்) கீழ் வரும் புரள்வினை **“(B)” கூட்டில் பதியவும்**
3. பண்டங்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியிலிருந்தான புரள்வினை **“(C)” கூட்டில் பதியவும்**
4. ஏனைய விற்பனையில் (“(A)”மற்றும் “(B)” தவிர்ந்தவற்றிலிருந்தான புறள்வு) உரிய புறள்வினை - **“(D)” கூட்டில் பதியவும்**
5. விலக்களிக்கப்பட்ட புரள்வினை - **“(W)” கூட்டில் பதியவும்**

உ+ம் 2019/2020 முதல் காலாண்டு – 2019.06.30 முடிவுறும் காலாண்டிற்கு உரிய புரள்வானது 2019.04.01 முதல் 2019.06.30 வரையிலான காலப்பகுதிக்கான புரள்வு (பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள) ஆகும்.

மாற்று அடிப்படையில் (அதாவது டிசம்பர் 31 முடிவுறும் 12 மாதங்கள்) கணக்குகளை தயாரிப்பதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்திடமிருந்து (CGIR) முன் அனுமதி பெறப்பட்டிருந்து அதற்கமைவாக வருமானவரி விபரத்திரட்டு சமரப்பிக்பட்டிருந்தால் அவ் அடிப்படை பொருளாதார சேவை கட்டணத்திற்கும் பொருந்தும். கலண்டர் வருட அடிப்படை பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றின் போது 2019/2020 இன் முதல் காலாண்டின் புரள்வானது 2019.01.01 முதல் 2018.03.31 வரையிலான புரள்வாகும். அந்த வருமானவரியை 2019.06.30 முடிவுற்ற காலாண்டிற்கான விபரத்திரட்டில் குறிப்பிடவும். அச்சிடப்பட்ட விபரத்திரட்டில் எதுவித மாற்றங்களையும் மேற்கொள்ள வேண்டாம்

**2. பொருளாதார சேவை கட்டணத்திற்கான பொறுப்பு**
ஒவ்வொரு நபர் மற்றும் பங்குதாரர்கள் (கூட்டுறவு சங்கங்கள், வதிவற்ற கப்பல் மற்றும் வான்சேவை கம்பனிகள், உள்ளூர் அரச நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், எவரேனும் லொத்தர் விநியோகத்தர்கள், வியாபாரிகள், நம்பிக்கை மற்றும் பரஸ்பர நிதிய அலகு எவையேனும் தவிர்த்து) பின்வரும் கடப்பாடுகளுக்கு அமைவாக பொருளாதார சேவை கட்டணத்தினைச் செலுத்த பொறுப்புடையர்கள் ஆவர்:

(i) ஒவ்வொரு வர்த்தகம், வணிகம், தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் என்வற்றிலிருந்தான புரள்வின் கூட்டுத்தொகையானது **உரிய காலாண்டில் இ.ரூபா 12.5 மில்லியன் அல்லது அதற்கு மேலதிகமாக** இருப்பவர்கள்: மற்றும்

(ii) இல 2036/23 வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வரும் புரள்வுகள்

- சரக்கு அனுப்புவோர்
- மாணிக்கம் மற்றும் வைரம் ஏற்றுமதியாளர்கள்
- NFE அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களிலிருந்தான ஆடை மற்றும் எந்தவொரு உற்பத்தியாளர் ஒருவரினதும் ஏற்றுமதி
- முதன்நிலை உடன்படிக்கையாளர்களினால் வைத்திருக்கப்படும் முறிகளின் விற்பனை

**3. பொருளாதார சேவை கட்டணக் கணிப்பீடு**

மொத்த உரிய புரள்வினை கணிப்பதுடன் (A), (B), (C) மற்றும் (D) கூடுகளின் பெறுமதிகளை கூட்டி அதன் பெறுமதியை (**Y**) கூட்டில் பதியவும்

**(A)+( B)+( C) +( D) = (Y)**

- **(Y) இன் பெறுமதி 12.5 மில்லியனுக்கு** சமனாகவும், கூடுதலாகவும் இருப்பின் பொ.சே.க பொறுப்பை பின்வருமாறு கணிக்கவும்

  (A) கூட்டின் 1/10 உம் (B) மற்றும் (D) கூடுகளின் கூட்டுத்தொகையை கணிக்கவும், அத்துடன் குறித்துரைக்கப்பட்ட பொருளாதார சேவை கட்டண வீதமான 0.5% த்தால் கணிக்கப்பட்ட பெறுமதியை பெருக்கவும்.

  **{( A)*1/10) +( B) +( D)} *0.5%**

- **ஏற்றுமதி மீது பொருளாதார சேவைக் கட்டணம்**

  (இ) கூட்டின் பெறுமதியை குறித்துரைக்கப்பட்ட பொருளாதார சேவை கட்டண வீதமான 0.5% த்தால் பெருக்கி, அப்பெறுமதியை கூடு (ஞ) வில் பதியவும்.

  **(C)*0.5%**

- **(Y) கூட்டின் பெறுமதி 12.5 மில்லியனுக்கும்** குறைவு எனில், பொருளாதார சேவை கட்டணப் பெறுமதி:

  (B) கூட்டின் பெறுமதியை குறித்துரைக்கப்பட்ட பொருளாதார சேவை கட்டண வீதமான 0.5% த்தால் பெருக்கவும்

  **(B)*0.5%**

**4. பகுதி –III இறக்குமதியின் போது சுங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட பொருளாதார சேவை கட்டணம்**

சுங்கத்திற்கு முற்பணமாக செய்யப்பட்ட பொருளாதார சேவை கட்டண கொடுப்பனவு குறிப்பிட்ட சரக்கின் விடுவிப்பு தினம் வரும் அதே காலாண்டிற்கான பொருளாதார சேவை கட்டணப் பொறுப்புக்கு எதிராக பற்றுவைக்கப்படலாம்.

**5. பகுதி –IV கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பொ.சே.க மிகுதி**

மொத்த பொருளாதார சேவை கட்டணப் பொறுப்பிலிருந்து இறக்குமதியில் சுங்கத்திற்கு செய்யப்பட்ட பொருளாதார சேவை கட்டண கொடுப்பனவை கழிப்பதன் மூலம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பொருளாதார சேவை கட்டணத்தைக் கணிக்கவும்.

**6. பகுதி –V கொடுப்பனவு செய்யப்பட்ட பொருளாதார சேவை கட்டண மிகுதி**

ஒவ்வொரு காலாண்டிலும் பெறுகை திகதியன்று ஆணையாளர் நாயகத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட வரியின் தொகையை பதியவும். (ஒவ்வொரு காலண்டு முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகைகள்)

**7. பிரகடனம்**

கூற்று அல்லது கூற்றின் ஒரு பகுதியானது வரி செலுத்துனரின் முழுநேர ஊழியர் ஒருவர் தவிர்நத, அங்கீகாரம் பெற்ற கணக்காளர் அடங்கலாக வேறு ஒரு நபரினால் தயாரிக்கப்பட்டிருப்பின் பிரகடணத்தின் பகுதி (அ) மற்றும் பகுதி (ஆ) ஆகிய இரு பகுதிகளும் கட்டாயமாக பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

- **பகுதி (அ)**

  அங்கீகாரம்பெற்ற கணக்காளர் அடங்கலாக மற்றைய நபரின் விபரங்கள் பகுதி (அ) வில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

- **பகுதி (ஆ)**

  வரிசெலுத்துநர் ஒருவர் அல்லது வரிசெலுத்துநரால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவர் பிரகடணத்தின் பகுதி (ஆ) வினைப் பயன்படுத்தி விபரத்திரட்டில் கையொப்பமிடல் வேண்டும்.

**8. விபரத்திரட்டிளை சமர்ப்பித்தல்**

பொருளாதார சேவை கட்டண புரள்வானது ஒப்புதல் பத்திரத்துடன் உரிய அலகிற்கு (நீங்கள் பொருளாதார சேவை கட்டண விபரக்கொத்தைப் பெற்றுக்கொண்ட அலகிற்கு 2020 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

பொருளாதார சேவை கட்டண புரள்வை சமர்ப்பிக்கத் தவறின் அல்லது உரிய நேரத்திற்கு சமர்ப்பிக்கத்தவறின் தண்டப் பண விதிப்பிற்கு உட்படுவீர்கள் என்பதை கவணத்தில் கொள்ளவும்.